1974 மார்ச் 29]

பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் நம்முடைய மாநிலத்தில் கூனூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் ரப்பர் தோட்டங்கள் வைப்பதற்கு குடியமர்த்தப்படுகிருர்கள். வேறு சிலருக்கு விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்து, விவசாயப் பயிற்சி அளித்து, பணம் கொடுத்து, அதற்கான வழிவகைகள் செய்கிறேம்.

மத்திய அரசுதான் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் தீட்டவேண்டும் என்று இதுவரையிலும் கேட்டுக்கொண்டு வந்தது. இப்பொழுது மாநில அரசை நீங்களே திட்டம் தீட்டுங்கள் என்று மாநில பிளானிங் கமிஷனை அவர்கள் கூறுகிருர்கள். அது பற்றி நமது அதிகாரிகளும் மத்திய அரசு அதிகாரிகளும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். அந்தப் பேச்சு முடிவுற்ற பிறகு எப்படிப்பட்ட திட்டங்கள் போடவேண்டும் என்பதை பரிசீலனை செய்து, எப்படி அவர்களை குடியமர்த்தலாம் என்பதுபற்றி முடிவு எடுக்கக் கூடும். அதற்குப் பிறகு தான் மத்திய அரசின் பங்கு எவ்வளவு, மாநில அரசின் பங்கு எவ்வளவு என்பதுபற்றி நிர்ணயிக்கக்கூடும். இப்பொழுது புதிய பேச்சு வார்த்தைகள் தொடங்கப் பெற்றிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு ஏதாவது அங்கேயிருந்து சொத்து, பணம் கொண்டு வருவதற்கு உரிமை இருந்ததா? அப்படியிருந்தால் அதன் விவரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு உதவி வழங்குகின்ற நேரத்தில், ஒன்றும் கிடைக் காதவர்களுக்கு அதிகப் பணம் கொடுத்து உதவுவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த விவரம் இப்பொழுது இல்லை என்றாலும், ரூ. 5,000 வரையில் சொத்து கொண்டு வரலாம் என்று அவர்கள் முடிவு எடுத்தது எனக்கு நினைவு இருக்கிறது. நான் இதைப்பற்றி அடிக்கடி தெரிந்துகொண்டிருக்கிற காரணத்தினல் அப்படித்தான் அப்பொழுது ஒத்துக்கொள்ளப்பட்டது. அந்த அளவுக்கு அவர்கள் நகையோ, பணமோ, காசோ கொண்டு வருகிருர்கள். இங்கே அவர்களுக்கு புனர்வாழ்வு திட்டங்கள் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. பல பேர்கள் புனர் வாழ்வு பெற்றிருக்கிருர்கள்.

ஓமலூர் அருகே மேம்பாலம்

*672 வின—திரு. வீ. செல்லத்துரை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் நகரத்தில், சேலம்–மேட்டூர் (ஓமலூர் வழியாக) சாலையின் குறுக்கே ஒரு ரெயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. செல்லத்துரை : சேலம்-ஓமலூர் வழியாகச் மேட்டூர் செல்லும் பிராட்கேஜ் லைனும், சேலம் பங்களூர் லைன் ஓமலூர் வழியாகச் செல்லும் மீட்டர் கேஜ் லைனும் ஒரே கேட்டில் அமைந்துள்ளது. கேட் மூடிவிட்டால் ½ மணி நேரம் வரையில் கேட் திறப்பதில்லை. ஆகவே, அங்கு போக்கு வரத்துக்குத் தடையாக இருக்கிறது. மேற்படி கேட்டில் மேம்பாலம் கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ் நாட்டில் ஓடுகின்ற ரயில்வே குறுக்குப் பாதைகளிலெல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும். நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்பொழுது யோசிக்கலாம்.

அய்யனேரி கால்வாய்

*673 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கேத்தாண்டப் பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : இந்த கேத்தாண்டப்பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, இந்த ஆண்டில் எப்படி யாவது தூர் வார அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இக்கால்வாயைப்பற்றி இப் பொழுது ஒன்றும் திட்டம் இல்லை என்று நான் தெரிவித்தேன். ஆனால், கேத்தாண்டப்பட்டி கிராமத்தருகில் பெத்தகல்லுப்பள்ளி கால் வாயை (கல்லாற்றில் ஆரம்பித்து கேத்தாண்டப்பட்டி அய்யனேரி கலங் கல் கால்வாயுடன் சேருமிடத்தில்) சீரமைக்கும் திட்டம் முன்னோடி ஆய்வில் உள்ளது. இத் திட்டத்திற்கான மதிப்பீடு சுமார் ரூ. 44,000.

திருப்பத்தூர் அருகே வெள்ளக் கால்வாய் புனரமைப்பு

*674 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஏரிக்கு வரும் வெள்ளக் கால்வாயை புனரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைபெறும் ?